செ.வெ.எண்: 182 நாள்: 22.03.2021

**கள்ளத்தனமாக மதுபானங்களை பதுக்கி வைத்தல் மற்றும் விற்பனையை தடுக்க சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் கள்ளத்தனமாக மதுபானங்களை பதுக்கி வைத்தல் மற்றும் விற்பனையை தடுக்க சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான தேர்தல் (2021) அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நேரத்தில் கள்ளத்தனமாக மதுபானங்களை பதுக்கி வைத்தல், விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவற்றை தடுக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி கள்ளத்தனமாக மதுபானங்களை பதுக்கி வைத்தல், விற்பனை மற்றும் விநியோகம் செய்தல் ஆகியவற்றை தடுக்கும் நோக்கத்தில் சென்னை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையர் அவர்களின் செயலாணைகள் படி மாவட்ட வாரியான சிறப்பு குழு காவல்துறை மற்றும் ஆயத்தீர்வை துறை ஆகிய அலுவலர்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்படி குழுவில் அறந்தாங்கி கோட்ட கலால் அலுவலர் திருமதி. க.ராஜேஸ்வரி (அலைபேசி எண். 96984 57799) மற்றும் மதுவிலக்கு மற்றும் அமலாக்கத்துறை அலுவலர் திரு.முத்துக்கருப்பன் (அலைபேசி எண். 94981 65927) ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பொதுமக்கள் மேற்கண்ட அலுவலர்களின் அலைபேசி எண்களை தொடர்பு கொண்டு கள்ள மதுபானங்களை பதுக்கி வைத்தல், விற்பனை மற்றும் விநியோகம் செய்வது தொடர்பாக புகார்கள் தெரிவிக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**